# தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
# கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு

# பதவி வெற்றிடங்கள்

**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்காக இலங்கை பிரஜைகளுக்கிடையில் தகுதியும் அனுபவமும் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## 01. பணிப்பாளர் (நிதி) (HM 1-1) – 01 பதவி

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

அ) இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICASL) அங்கத்துவம் அல்லது முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தின் அங்கத்துவம் (CIMA) மற்றும் சான்றளிக்கப்பட்ட மற்றும் பட்டயக் கணக்காளர்களின் சங்கத்தின் அங்கத்துவம் (ACCA) பெற்றிருத்தல்.

அல்லது

ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து கணக்கியல் / முகாமைத்துவம் / வர்த்தகம் / பொருளியல் தொடர்பான ஆரம்பப் பட்டம் மற்றும் முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றிருத்தல்.

மற்றும்

இ) சம்பந்தப்பட்ட துறையில் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் 15 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:**

HM 1-1 - ரூபா 140,640 - 4,100x15 - 202,140+ அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு.
(இச்சம்பள அளவுத்திட்டம் 2027.01.01ஆம் திகதியிலிருந்தே நடைமுறைப்படுத்தப்படும்)

**மேலதிக நன்மைகள்:**

PED சுற்றறிக்கை 01/2015 இலக்கத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

தொழில்சார் கொடுப்பனவு

தொலைபேசி கொடுப்பனவு

**வயது:**

35 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர்).

## 02. உதவிப் பணிப்பாளர் (செயற்பாடுகள்) (MM 1-1) – 01 பதவி

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து வியாபார நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் / வர்த்தகம் / புள்ளிவிபரவியல் தொடர்பான ஆரம்பப் பட்டத்தைப் பெற்ற பின்னர், அரச கூட்டுத்தாபனம், சபை, நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் 03 வருட அனுபவம்.

ஆ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இ) ஆங்கில மொழியில் பணியாற்றக் கூடிய ஆற்றல் அத்தியாவசியமானது.

**சம்பள அளவு:**

MM 1-1 - ரூபா 91,690 - 2,480x10 - 3,450x15 - 168,240 + அரச கொடுப்பனவு.
(இச்சம்பள அளவுத்திட்டம் 2027.01.01ஆம் திகதியிலிருந்தே நடைமுறைப்படுத்தப்படும்)

**மேலதிக நன்மைகள்:**

- தொழில்சார் கொடுப்பனவு
- தொலைபேசி கொடுப்பனவு

**வயது:**

22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர்).

**மேலதிக நன்மைகள்:**

- ஊழியர் சேமலாப நிதியம் / நம்பிக்கைப் பொறுப்பு நிதிய உரிமை
- வருடாந்த இலாபத்தின் அடிப்படையில் வழங்கப்படும் ஊக்குவிப்பு கொடுப்பனவு
- ஊழியர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கான மருத்துவ உதவி மீளளிப்பு
- போக்குவரத்து கொடுப்பனவு
- பரிசு கொடுப்பனவு
- வீடமைப்பு கடன் வட்டி மற்றும் ஏனைய கடன் வசதிகள்

மேற்குறிப்பிட்ட அனைத்துப் பதவிகளுக்கும் விண்ணப்பிக்கும் பிரஜைகள் நாட்டின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

மேற்படி பதவி தொடர்பாக ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள், தங்களைப் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர்கள், பதவிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்களை விண்ணப்பத்தில் உள்ளடக்கி, தமது தொழில்சார் மற்றும் கல்விச் சான்றிதழ்கள், சேவைச் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் சகிதம் 2026.09.21ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிட்டு, தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிக்குக் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

அரச துறையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும். தாமதித்து கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி**
**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை,**
**இல. 260, RTFC & WMC கட்டிடம், லேக் டிரைவ், கொழும்பு - 05.**
**தொலைபேசி இலக்கம் - 011-2390645 - 011-2390646**
**தொலைநகல் - 011-2320758**